செ.வெ.எண்:53 நாள்-23.08.2019

# பத்திரிக்கைச் செய்தி

சூரியசக்தி பயன்பாட்டினை ஊக்குவிக்கும் வகையில் தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டத்தின் மூலம் வேளாண் விளை பொருட்களை சூரியசக்தி மூலம் உலர்த்தி பதப்படுத்துவதற்காக அரியலூர் மாவட்டத்திற்கு 2019 – 20 ஆம் நிதி ஆண்டிற்கு 4 எண்கள் சூரிய கூடார உலர்த்திகள் அமைப்பதற்கு இலக்கு பெறப்பட்டுள்ளது.

. ஒரு சூரிய கூடார உலர்த்தி அமைப்பதற்கு 400 சதுர அடி முதல் 1000 சதுரஅடி வரை 3 இலட்சம் முதல் 7 இலட்சம் வரை செலவாகிறது. ஆதில் சிறு குறு ஆதிதிராவிடர் மற்றும் பெண் விவசாயிகளுக்கு ரூ. 3.50 லட்சம வரையிலும் இதர விவசாயிகளுக்கு 3.00 லட்சம் வரையிலும் மான்யம் வழங்கப்படுகிறது.

சூரிய கூடார உலர்த்திகள் மூலம் விவசாயிகள் தங்களது வேளாண் விளை பொருட்களான மிளகாய், வாழைப்பழம், கொப்பரைதேங்காய், தக்காளி, வெண்டை, கொத்தவரை போன்ற பொருட்களை உலர்த்தி, பதப்படுத்தி வைத்து வேளாண் விளை பொருட்களுக்கு சந்தையில் உரிய விலை கிடைக்கும்பொழுது விற்பனை செய்து கூடுதல் வருமானம் பெறுவதற்கு இத்திட்டம் பயனுள்ளதாக இருக்கும். இவ்வகை உலர்த்திகளில் காய வைக்கப்படும் வேளாண் விளை பொருட்கள் தரம் குறையாமல் பாதுகாக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் பயன்பெற விரும்பும் விவசாயிகள் விண்ணப்பத்துடன் சமீபத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம் 2, நிலவரைபட நகல், அடங்கல், கணினி சிட்டா, இத்துறை மூலம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட விலைப்புள்ளி ஆகிய ஆவணங்களுடன் அரியலூர், திருமானூர் வட்டார விவசாயிகள் உதவி செயற் பொறியாளர் (வேபொ), ஜெயங்கொண்டம் ரோடு, அரியலூர். அலுவலகத்திலும், ஜெயங்கொண்டம், டி.பழூர், செந்துறை, ஆண்டிமடம் வட்டார விவசாயிகள் உதவி செயற் பொறியாளர் (வேபொ), உடையார்பாளையம் அலுவலகத்திலும் விண்ணப்பம் சமர்பித்து முன்னுரிமை அடிப்படையில் சூரிய கூடார உலர்த்தியை அரசு மானியத்துடன் அமைத்துக் கொள்ள என மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**